**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாவட்ட அளவில் முதல் 3 இடங்களைப் பெறும் பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு ரொக்கப் பரிசு, பாட புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் மற்றும் உயர்கல்வி பயில ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் – 2013–2014 ஆம் ஆண்டிற்கான கூடுதல் தொகை – 2014–2015 ஆம் நிதியாண்டில் ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1 D) எண். 12,** **நாள்: 04.06.2014**

**ஜய–வைகாசி 21, திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கப்பட்டது:**

1. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண்.3762/சிபதி/2013, நாள் 08.07.2013.
2. அரசாணை (1டி) எண்.09, மாற்றுத் திறனாளிகள் (மாதிந.1) துறை, நாள் 26.03.2014.

––––

**<u>ஆணை:</u>**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், முதன்மைச் செயலாளர்/ மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், 2013–2014ம் ஆண்டில், 10 மற்றும் 12ம் வகுப்பில், மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பார்வையற்ற மாணவ / மாணவியர்களுக்கு ரொக்கப் பரிசுத் தொகை, பிரெய்லி புத்தகம், விடுதிக் கட்டணம் மற்றும் உயர்கல்வித் தொடர நிதியுதவி வழங்கும் திட்டத்திற்கு திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.76,32,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2013–2014 ஆம் ஆண்டிற்கு அரசு சிறப்புப் பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயிலும் 10 மற்றும் 12ம் வகுப்பில், மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பார்வையற்ற மாணவ / மாணவியர்களுக்கு ரொக்கப் பரிசுத் தொகை, பிரெய்லி புத்தகம், விடுதிக் கட்டணம் மற்றும் உயர்கல்வித் தொடர நிதியுதவி வழங்கும் திட்டத்தினைத் தொடர, திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.62,40,000/– நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலும், இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு, 2013–2014 ஆம் நிதியாண்டிற்காக மேலே இராண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ரூ.62,40,000/– ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை போக, கூடுதல் தொகை ரூ.8,64,000/–ஐ (ரூபாய் எட்டு இலட்சத்து அறுபத்து நான்காயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

**[த.பி.பா]**

4. மேலே பத்தி 3–இல் காணும் செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:–

**“2235 – சமூக பாதுகாப்பும் நலனும் - 02- சமூகநலன் 101 மாற்றுத் திறனாளிகள் நலன் I – திட்டத்தில் சேராதது – AA – பார்வையற்றோர் பள்ளி – 59 – பரிசுகளும் வெகுமதிகளும் ” (து.தொ.கு. 2235–02–101–AA- 5904).**

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.28777/நிதி(சந)/2014, நாள் 02.06.2014–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்.**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
**நகல்**
செயலரின் தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
நிதி (சந) / (வ.செ.பொ–II) துறை, சென்னை–9.
இ. கோ / உ. ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்